புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023 ISSN: 2456-821X

# பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் வேளாண் செய்திகள்

முனைவர் கோ.கவிதா,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
வி.ஐ.டி., தொழில்நுட்பப் பல்கலைக்கழகம்,
காட்பாடி - 7, வேலூர்.

ஆய்வுச்சுருக்கம்

சங்ககாலத்துக்குப் பின் சங்கம் மருவிய காலத்தில் தோன்றியவை பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் ஆகும். இந்நூல்களில் அறம் மற்றும் மருத்துவம் சார்ந்த கருத்துகளே அதிகமாக ஆராயப்பட்டுள்ளன. அவை மட்டுமல்லாமல் வேளாண்மை, வானியல், நீர் மேலாண்மை, உடல்நல மேலாண்மை, கட்டடவியல், உலோகவியல், அரசியல், சட்டவியல் போன்ற செய்திகளும் அடங்கியுள்ளன. அவற்றுள் உயிர் வாழ தேவையானவைகளுள் ஒன்றாகவும், பண்பாட்டுச் சின்னமாகவும் விளங்கும் விவசாயத்தைப் பற்றி ஆராய்வதே இவ்ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

## முன்னுரை

மரபு என்பது மரபினரால் அறிமுகப்படுத்தப்பட்டு, வழிவழியாக முறைப்படுத்தப்பட்டு செப்பம் செய்யப்பட்ட பல்துறை சார்ந்த அறிவு எனக் கொள்ளலாம். தேவையும் பயனும் கருதி இவை ஏற்றுக்கொள்ளப்பட்டும் புறந்தள்ளப்பட்டும் வந்திருக்கின்றன. அவ்வகையில் அடிப்படைத் தேவையான உணவு உற்பத்தியைப் பற்றி காண்போம்.

## பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்

பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் ஒவ்வொன்றும் தனித்தனியான வெவ்வேறு புலவர்களால் பாடப்பட்டவை. இதனை,

"நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகம் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைய காஞ்சியோ டேலாதி என்பவே
கைந்நிலைய வாம்கீழ்க் கணக்கு."

என்னும் பழம்பெரும் வெண்பாவால் அறியலாம்.

## வேளாண்மை

அடிப்படைத் தேவைகளில் முதலாவதான, உணவின் தேவையை நிறைவு செய்வதற்கான செயல்பாடுகள் பலவித படிநிலைகளைக் கொண்டுள்ளன. இவை விளை நிலங்களை உருவாக்குதல், செப்பம் செய்தல், பயிரிடல், நீர்ப்பாய்ச்சுதல், எரு இடல், காத்தல், அறுவடை செய்தல் போன்ற நிலைகளில் அமைகின்றது. நல்ல உழவரைப் பற்றிக் குறிப்பிடுமிடத்து,

"புலத்தியல்பு புக்கன் உரைக்கும்"[1]

என்கிறது நான்மணிக்கடிகை. இதில் உழவன் என்பவன், தான் பயிர் செய்யும் நிலத்தின் தன்மையை அறிந்திருந்தல் வேண்டும் என்பதும் அவனாலேயே நல்ல விளைச்சலை ஈட்ட முடியும் என்பதும் கூறப்படுகிறது.

விளைநிலத்தை மேம்படுத்துதல்

விளைநிலத்திலுள்ள வைக்கோலைச் சேமித்து, நாள்தோறும் உழு மாடுகளைக் காப்பாற்றுதல்; மாடுகளைக் கொண்டு நிலத்தை உழுதல், பண்படுத்துதல்; எருயிடுதல், மேம்படுத்துதல் போன்றவற்றால் நிலத்தை நன்செய் நிலமாக மாற்றுதல் ஆகியவற்றைச் செய்பவனே உழு தொழிலில் சிறந்தவனாவான் என்கிறது சிறுபஞ்சமூலம். அவ்வகையில் குறிஞ்சி நில மக்களால் மரம், செடி, கொடிகள் வெட்டி ஒழுங்குபடுத்தி பயிரிடப்பட்டு, பன்றிகள் கொம்புகளால் உழுத (கிளறுதல்) குளிர்ந்த கதிர்களையுடைய தினைப்புனங்களை,

"எறிந்தெமர் தாமுழுத வீர்ங்குரல் ஏனல்"[2]

என்ற அடியும்,

"கேழல் உழுத கரிபுனக் கொல்லையுள்"[3]

என்ற அடியும் உணர்த்துகின்றது.

உழுதல்

உழுதலுக்கு ஏர் மாடுகள் பயன்படுத்தப்பட்டன. தனக்கு உரிமையுடையதாகிய ஏர் மாடுகளை வைத்திருப்பவர் உயர்வாகக் கருதப்பட்டார். அவருடைய வேளாண்மை,

"ஏருடையான் வேளாண்மை தானினிது"[4]

என்று போற்றப்பட்டது. உழுமாடுகள் இல்லாமல், பிறரின் எருதுகளை நம்பி உழுதொழிலில் ஈடுபடுபவர்களால் குறித்த காலத்தில், குறித்த வேளாண்மையை மேற்கொள்ள இயலாது. உழுவதற்கு நிலத்தில் ஈரப்பதம் இன்றியமையாதது என்பதால், அவர்களால் நிலத்தினைப் பண்படுத்த முடியாத சூழ்நிலை நிலவியது. எனவே வேளாண் தொழில்புரிவோருக்கு உழுமாடுகளின் தேவை அவசியமானதாகும். உழுமாடுகள் இல்லா உழவனின் நிலையை,

"எருதில் உழவர்க்கு போ(கு) ஈரம் இன்னா"[5]

என்பதில் அறியமுடிகிறது. இதில் எருதில்லாத உழவர்கள், சிறிதளவு மழை பெய்யும் காலத்தில், அந்தக் குறைந்த ஈரப்பதம் கொண்டு நிலத்தை உழ எருதுகள் கிடைக்காமல் துன்பம் அடைவர் என்பது சுட்டப்படுகிறது.

நீர்ப் பாய்ச்சுதல்

நீர்ப்பாய்ச்சுவதால் விளைநிலம் செழிப்படையும் என்பதை,

"நீரான்வீ றெய்தும் விளைநிலம்"[6]

என்பதில் அறியலாம். நீரை முறையாகப் பாய்ச்சவில்லை என்றால், பசும் பயிர்களின் நலன் கெடும். இருப்பது சிறிதளவு நீராயினும் அதை வாய்க்கால்கள், பாத்திகள் என முறைப்படுத்தி பாய்ச்சுதல் வேண்டும். அப்பொழுதுதான் அனைத்துப் பயிர்களுக்கும் தேவையான நீர் சென்றடையும். இதனை வாய்க்காலைப் போல, எந்தப் பயனையும் எதிர்ப்பாராமல் செயலாற்றுபவர்களின் நட்பு சமூகத்தில் போற்றப்பட்டது.

"வரப்புயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும், நெல் உயரக் குடி உயரும், குடி உயர கோன் உயரும் என அனைத்திற்கும் நீரே அடிப்படை என்றும், நீரை உயர்ந்த வரப்புகளைக் கட்டி நிறைவாகப் பாய்ச்சினால் அதிக விளைச்சல் கிட்டும்"[7] என்பதையும் சிறுபஞ்சப்பாடல் விளக்குகிறது.

களை எடுத்தல்

பயிரில் களைகளைப் பிரித்தறிந்து, அவற்றை நீக்கினால்தான் எதிர்பார்த்த விளைச்சல் இருக்கும். அறிவினையுடையவர்கள் பயிரில் வளரும் களைகளுக்கு ஒப்பாகச் சுட்டப்பட்டதை,

"… … … … …. … … … … . பிணிபயிலும்
புல்லன்னர் புல்லறிவின் ஆடவர்"[8]

என்ற அடிகள் காட்டுகின்றன.

பயிர்ப் பாதுகாப்பு

எரு இடுதல், நீர்ப்பாய்ச்சுதல், களையெடுத்தல் போன்றவற்றை முறைப்படுத்தி செய்தாலும், பயிர் நன்கு விளைந்தாலும் பாதுகாப்பு இல்லாத பயிர் எதிர்பார்த்தப் பலனைத் தராது. தினைப்புனம் காத்தல் மகளிர், ஆடவர் என இருபாலராலும் மேற்கொள்ளப்பட்டது.

எனவே, விளையும் காலத்தில் பயிரைக் காப்பாற்றாதான் உழவுத்தொழில், நிலை நிற்பன போல தோன்றி கெட்டு அழியும் என்பதை,

"… … … . பைங்கூழ்
விளைவின்கண் போற்றான் உழவும்
… … … … . உள்ளனபோல கெடும்"[9]

என்றும், வேலி இல்லாத கரும்பைக் காத்து பலன் பெறுதல் கடினம் என்பதை,

"சிறையில் கரும்பினைக் காத்தோம்பல் இன்னா"[10]

என்றும் பாடல் அடிகள் கூறுகிறது.

அறுவடை

முற்றிய பயிர்களின் தானியங்கள் அறுவடை செய்து சேகரிக்கப்பட்டன. அறுவடை செய்யும் காலத்தைப் பயிர்களின் விளைவினைக் கொண்டும், இயற்கை நிகழ்வுகளைக் கொண்டும் அறிந்தனர். தினை முதிரும் காலம், வேங்கை மரம் பூக்கும் காலத்தைக் கொண்டு அறிந்ததை,

"… … … … … … … … … … … … … நீடாப்
பனைவிளைவு நாமெண்ணப் பாத்தித் தினைவிளைய"[11]

என்பதில் அறியமுடிகிறது. இதில், பாத்தியின் தினைப் பயிரானது விளைந்து போனபடியால், வேங்கை மரமானது தம்முடைய பூத்தலாகிய செயலினால் தினை கொய்ய வேண்டிய நாள் வந்துவிட்டதென்று அறிவித்தது கூறப்படுகிறது.

விதை தானியம்

முற்றிச் சேகரிக்கப்பட்ட தானியங்களில் இருந்து, ஒரு குறிப்பிட்ட அளவு தானியம் அடுத்த பருவத்து விதையாகப் பாதுகாக்கப்பட்டது. எந்நிலையிலும் இவ்விதை தானியத்தைச் செலவிடக்கூடாது என்பதை,

"வித்துக்குற்று உண்ணா விழுப்பம் மிக இனிதே"[12]

என்ற பாடலடி வழி அறியலாம்.

மானாவாரி பயிர்

நீர் இறைத்தல், எரு இடுதல், களை எடுத்தல், காத்தல் போன்றவை இல்லாமல், மழையை மட்டும் நம்பி பயிரிடப்படும் மானாவாரி நெல்லான 'ஐவனம்' குறித்து பல இடங்களில் சுட்டப்பட்டுள்ளது. ஐவனம் என்பது பல்வகையான மலர்களைப் பரப்பி வைத்தாற்போன்ற மலைநெல் என்பதை,

"… … … … … … … … .. பல்பூப்பெய்
தாலொத்த ஐவனம்"[13]

என்ற அடிகள் மூலம் அறியலாம்.

ஊடு பயிர்

நன் செய் பயிர்களைப் பண்படுத்தி புன்செய்யாக மாற்றி, அதில் விளைவிக்கும் பயிர்கள் மானாவாரிப் பயிரிடும் முறை போன்றவற்றோடு ஊடுபயிர் முறையும் பதினெண் கீழ்க்கணக்கில் காணப்படுகிறது. அவ்வகையில் தினைப்புனத்தில் முற்றிய நிலையிலுள்ள தினைத்தாள்களில் அவரைக் கொடிகள் பயிரிடப்பட்டிருந்ததை,

"அவரை பொருந்திய பைங்குரல் ஏனல்"[14]

என்ற அடி காட்டுகின்றது.

மழைநீர் மேகம் உருவாதல்

இவ்வுலகத்து உயிர்கள் எல்லாம் வானத்தை நம்பியே வாழ்கின்றன. வானம் வழங்காமல் பொய்த்துப்போனால் மண்ணுலகில் புல்லுக்கும் இடமில்லை என்பதைப் பண்டைத் தமிழர் அறிந்திருந்தனர். அதனால், நீரின் தேவை குறித்து உலகிற்கு உணர்த்தியதோடு நீரின் இயல்பு, மழை உருவாகும் விதம் போன்றவற்றையும் நன்கு ஆராய்ந்திருந்தனர். கடல்நீர் ஆவியாதல் மூலம் உருவாகும் வெண்மேகம் மலைகள் இருக்கும் பகுதிக்குச் செல்லும்பொழுது

குளிர்காற்றினால் குளிர்விக்கப்பட்டு, கருமேகமாக உருமாறி மழையாகப் பொழிகின்றன என்ற நுட்பம் (கார்.12, 17, 33, 34, 37 ஐ.ஐ.1, 5)பல பாடல்களில் கூறப்பட்டுள்ளது. இந்த உலகத்திற்கும் மழைத்துளிகளுக்குமான உறவைப் பற்றிக் குறிப்பிடுமிடத்து,

"… … … … … … … …. வானத்
துளிநோக்கி வாழும் உலகம்"[15]

என்றும்,

"மழையின்றி மாநிலத்தார்க்கு இல்லை"[16]

என்றும், நிலத்தின் இயல்பை அந்நிலத்தில் பெய்யும் மழையின் இயல்பே தீர்மானிக்கும் என்பதை,

"… … … … …. நிலத்தியல்பு
வானம் உரைத்து விடும்"[17]

என்றும் பதிவு செய்துள்ளது.

முடிவுரை

வேளாண்மை தேசிய பொருளாதாரத்தின் உயிர்நாடி ஆகும். உணவுப் பாதுகாப்பில் நிலையான தன்மையை அடையவும், நாட்டு மக்களின் நலன் காக்கவும் வேளாண் வளர்ச்சி மிகவும் முக்கியமானதாகும். இத்தகைய விவசாயத்தின் பயிரிடும் முறைகளைப் பற்றி பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் வழி சற்று விரிவாக ஆராய்ந்து அறியப்பட்டுள்ளது.

அடிக்குறிப்புகள்

1. நான்மணிக்கடிகை, பா.வரி.71:2-3
2. ஐந்திணை ஐம்பது, பா.வரி.18:1
3. ஐந்திணை எழுபது, பா.வரி.11:1
4. இனியவை நாற்பது, பா.வரி.3:3
5. இன்னா நாற்பது, பா.வரி.4:1
6. நான்மணிக்கடிகை, பா.வரி.86:1
7. சிறுபஞ்ச மூலம், பா.வரி.46
8. நான்மணிக்கடிகை, பா.வரி.34:2-3
9. திரிகடுகம், பா.வரி.59:1-3
10. இன்னா நாற்பது, பா.வரி.5:1
11. திணைமொழி நாற்பது, பா.வரி.5:1-2
12. இனியவை நாற்பது, பா.வரி.40.2
13. திணைமொழி நாற்பது, பா.வரி.19:1-2
14. ஐந்திணை எழுபது, பா.வரி.1:1
15. நான்மணிக்கடிகை, பா.வரி.29:2-3
16. நான்மணிக்கடிகை, பா.வரி.45:1
17. மேலது, பா.வரி.71:3-4

துணைநூற்பட்டியல்

1. பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் மூலமும் உரையும், மீனாட்சி புத்தக நிலையம், சென்னை.
2. பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் மூலமும் உரையும், தொகுதி 1, 2, 3, முல்லை நிலையம், சென்னை.

********* ********* ********** ********* ********* ********** ********** **********